# இலங்கை

## போராட்டங்கள், பொலிஸ் மற்றும் இராணுவ வன்முறையை காட்சிப்படுத்துவதற்கான 10 உதவிக்குறிப்புகள்

WITNESS
SEE IT FILM IT CHANGE IT

### 1 கடவுச்சொல் பாதுகாப்பு

உங்கள் திறன்கைபேசிக்கு கடவுச்சொல் இட்டுப் பாதுகாப்பாக வையுங்கள். கைரேகையோ அல்லது முக அங்கீகாரம் அமைப்பையோ வைக்க வேண்டாம். பறிமுதல் செய்யப்படும் ஆபத்து இருப்பதால் கூருணர்வு மிக்க தரவுகளை அழித்து விடுங்கள் அல்லது உங்கள் திறன்கைபேசியை குறியாக்கம் செய்து வைத்துக் கொள்ளுங்கள்.



### 2 மின்கலன்களை மின்னேற்றல்

உங்கள் கைபேசியின் மின்கலனை மீள்நிரப்பி வைத்துக் கொள்ளுங்கள். கைபேசியில் சேமிப்பகத்தில் இடவசதியை ஏற்படுத்தி வையுங்கள். தானியங்கி காப்புப்பிரதியெடுத்தலை செயற்படுத்தி வையுங்கள். உ-ம். உங்கள் கைபேசி காணாமல் போனால் / சேதமடைந்தால் / பறிமுதல் செய்யப்பட்டால்.



### 3 மின்சேமிப்பான் (Powerbank) ஒன்று வைத்திருத்தல்

மின்சாரம் தடைபடும் போது உங்கள் சாதனங்களை மின்னேற்றம் செய்வதற்கும், கையடக்க மின் காப்பான் அல்லது இன்வெர்ட்டர்களைப் பெறுவது தொடர்பில் கவனம் செலுத்துங்கள்.



### 4 GPSஇனை செயல்படுத்தல்

செய்தி ஊடகங்கள், மனித உரிமை அமைப்புகள் மற்றும் நீதிமன்றங்கள் உங்கள் காணொளியைச் சரிபார்க்க உதவ, உங்கள் கைபேசியில் சரியான திகதி, நேரம் மற்றும் GPS இருப்பிடத்தை அமைக்கவும், அது மூலக்கோப்பில் பதிவு செய்யப்படும். பாதுகாப்பாக இருக்குமாயின், படம் எடுப்பது நீங்கள்தான் என்பதை உறுதி செய்வதற்கு புகைப்படக் கருவி / கைபேசியில் பேசவும். புகைப்படக் கருவியில் திகதி, நேரம், இடம் ஆகியவற்றைக் கூறவும். தெரு அடையாளங்கள், குறுக்குபாதைகள் மற்றும் அடையாளங்களை படம்பிடிப்பதன் மூலம் இருப்பிடத்தை உறுதிப்படுத்தவும்.








### 5 மங்கலாக்கும் கருவிகள்

நீங்கள் நேரலையில் படமெடுக்கவில்லை என்றால், மக்கள் அடையாளங்களைப் பாதுகாப்பதற்கு மங்கலாக்கும் கருவியைப் பயன்படுத்தவும். நீங்கள் பயன்படுத்தக்கூடிய சில கருவிகள் கீழே உள்ளன.



### 6 வன்முறையை பதிவுசெய்தல்

பொலிஸ் / இராணுவ வாகனங்கள், சீருடைகள், இலச்சினைகள், பொலிஸ் / இராணுவ தரவரிசையின் அடையாளங்கள் போன்ற விவரங்களைப் படம்பிடிக்கவும். பாதுகாப்பாக இருக்குமாயின், துப்பாக்கிச் சூடு அல்லது உடல் ரீதியான தாக்குதல்கள் போன்ற வன்முறையை ஆவணப்படுத்தவும், அத்துடன், குற்றவாளிகளின் மற்றும் சுற்றியுள்ள கூட்டங்களின் அடையாளங்களையும், ஏதேனும் காயங்கள், கட்டிடங்களுக்கு ஏற்பட்டுள்ள சேதம், துப்பாக்கி இரவை துளைகள் அல்லது அருகிலுள்ள வாகனங்கள் போன்றவற்றைப் படம்பிடிக்கவும்

### 7 பாதிக்கப்பட்டவர்களை பதிவுசெய்தல்

பாதிக்கப்பட்டவர்கள் அமைதியாகச் செயல்படுவதைக் காட்டுங்கள். பாதிக்கப்பட்டவர்களை குறிப்பாக அவர்கள் குறிவைக்கப்பட்டிருந்தால் ஆவணப்படுத்தவும்.



### 8 உங்கள் காணொளிகளுக்கு பெயரிடல்

சமூக ஊடகங்களில் காணொளியைப் பகிர முடிவு செய்தால், (எ.கா., Facebook/ Twitter/Youtube) மனித உரிமை மீறலை அம்பலப்படுத்துவதற்கு இதைப் பகிர்கிறீர்கள் என்று சுருக்கமான, விளக்கமான தலைப்பைச் சேர்க்கவும். முடிந்தால், உங்கள் காணொளியின் தொடக்கத்தில் ஒரு தலைப்பை வழங்கவும். காட்சிகள் வன்முறையாகவோ அல்லது பார்ப்பதற்கு சிக்கலானதாகவோ இருப்பதால் அகற்றப்படாமல், ஆதாரமாக தளத்தில் இருப்பதை உறுதிசெய்ய இது உதவுகிறது.




### 9 VPN மற்றும் ரோமிங் வசதியுடன் சிம்

உங்கள் தரவு மற்றும் இணைய இணைப்பை பரிசோதிக்கவும். உங்களால் முடிந்தால், இணையம் நிறுத்தப்பட்டால் VPN மற்றும் ரோமிங் சிம்முடன் தயாராக இருங்கள்.




### 10 உங்கள் கோப்புகளை பாதுகாத்தல்

உங்கள் மூல காணொளி கோப்புகளை எப்போதும் பாதுகாப்பான இடத்தில் வைத்திருங்கள். மூலக் கோப்பில் திருத்தங்களைச் செய்ய வேண்டாம் - எப்போதும் நகலெடுத்து திருத்துங்கள்.



ILLUSTRATIONS BY @GORES.GARIS (INSTAGRAM)

உதவிக்குறிப்பு தாள் v1.0
படைப்பாக்க பொதும உரிமத்தின் கீழ்
வெளியிடப்பட்டது (CC BY-NC-SA 4.0)

library.witness.orgஇல் படமாக்கல் பற்றிய மேலதிக உதவிக்குறிப்புகளைப் பெறவும்.

இந்த ஆதாரத்தைப் பற்றி உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் அல்லது கருத்துகள் இருந்தால் அல்லது நீங்கள் பயன்படுத்தும் கருவிகள் மற்றும் நுட்பங்களைப் பகிர்ந்து கொள்ள விரும்பினால், Twitter @WITNESS_Asia அல்லது fb.com/witnessasia இல் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.